தொடர்ந்து தேசிய தலைவர்கள் வருகை

தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது

கோவை, ஜன.10– தொடர்ந்து தேசிய தலைவர்களின் வருகையால் தமிழக அரசியல் களம் சூடுபிடித்துள்ளது.

பாஜக தேசிய செயல் தலைவர் நிதின் நபின், நாளை (சனிக்கிழமை) தமிழகம் வருகிறார். கோவையில் நடைபெறவுள்ள முக்கிய ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்று, தேர்தல் பணிகளை அவர் முடுக்கி விட உள்ளார். தேசிய தலைவராக பொறுப்பேற்றதுமே புதுச்சேரி செல்லும் வழியில் கடந்த மாதம் தமிழகம் வந்த நிதின் நபின், இரண்டாவது முறையாக நாளை தமிழகம் வருகிறார்.

நேரடியாக கோவை செல்லும் அவருக்கு விமான நிலையத்தில் பாஜகவினர் உற்சாக வரவேற்பு அளிக்கத் திட்டமிட்டுள்ளனர். நாளை மாலை கோவை வந்தடையும் அவர், அங்கே இரண்டு நாட்கள் தங்கியிருந்து கட்சி நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்துகிறார். ஜனவரி 11–ம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) கோவையில் பா.ஜ.க.வின் மாநில மையக்குழு கூட்டம் நடைபெறுகிறது. இக்கூட்டத்தில் தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழல், பாஜகவின் கிளை அளவிலான வளர்ச்சிப் பணிகள், சட்டப்பேரவை தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வு மற்றும் தொகுதிப் பங்கீடு குறித்த ஆரம்பகட்ட விவாதங்களில் அவர் ஈடுபடுகிறார். தொடர்ந்து, அ.தி.மு.க. – பா.ஜ.க. –பா.ம.க. கூட்டணி பலம் மற்றும் அடுத்தகட்ட நகர்வுகள் ஆகியவை குறித்தும் விரிவாக விவாதிக்கிறார். இதில் மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், முன்னாள் தலைவர் அண்ணாமலை, வானதி சீனிவாசன் எம்எல்ஏ உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

தொடந்து தேசியத் தலைவர்களின் வருகையால் தமிழக அரசியல் களம் பரபரப்பாகி வரும் நிலையில், நிதின் நபினின் இந்த இரண்டு நாள் பயணமும் பாஜக தொண்டர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

பல உயிர்களை பலி வாங்கிய இடத்தை மீண்டும் திறந்து விட்ட மத்திய நெடுஞ்சாலை துறை:

விபத்து அபாயம் என்பதால் நிரந்தரமாக அடைக்க அமைச்சர் உத்தரவு

அருப்புக்கோட்டை ஜன 10 அருப்புக்கோட்டையில் மதுரை –தூத்துக்குடி நான்கு வழிச்சாலையில் ரயில்வே மேம்பாலத்திலிருந்து இறங்கும் பகுதியும் அருப்புக்கோட்டை நகருக்குள் நுழையும் பகுதியும் சேரும் இடம் உள்ளது. அந்த இரு சாலைகளுக்கும் நடுவே சென்டர் மீடியன் வைக்கப்பட்டு இருந்தது.

பல விபத்துக்கள் ஏற்பட்டு உயிர்கள் பல பலியான பின்னர் தொட்டியாங்குளம், குறிஞ்சாக்குளம், செம்பட்டி உள்ளிட்ட கிராம மக்களின் கோரிக்கைக்கு பின்னர் சென்டர் மீடியன் அமைக்கப்பட்டு விபத்துக்கள் தவிர்க்கப்பட்டது.

ஆனால் திடீரென சென்டர் மீடியன் இடிக்கப்பட்டு இரு சாலைகளும் இணைத்து திறந்து விடப்பட்டது.

திறந்து விடப்பட்ட அன்றே குறிஞ்சா குளத்தைச் சேர்ந்த முனியசாமி என்பவர் விபத்துக்குள்ளானார்.

இதனை கேள்விபட்ட அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் மத்திய நெடுஞ்சாலை துறை அதிகாரிகளை உடனடியாக தொடர்பு கொண்டு சென்டர் மீடியனை நிரந்தரமாக மூடுவதற்கு உத்தர பிறப்பித்தார்.

தொடர்ந்து விபத்துக்கள் நடைபெறா வண்ணம் உத்தரவு பிறப்பித்த அமைச்சருக்கு அப்பகுதி கிராம மக்கள் நன்றி தெரிவித்தனர்.

பூட்டிய வீட்டில் 15 பவுன் நகை, வெள்ளி பொருட்கள் கொள்ளை

மர்ம ஆசாமிகள் கைவரிசை

அருப்புக்கோட்டை ஜன 10: அருப்புக்கோட்டையில் வீட்டை பூட்டி விட்டு கோவிலுக்கு சென்று திரும்பி வந்து பார்க்கையில் பூட்டை உடைத்து 15 பவுன் தங்க நகை மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்த சம்பவம் அப்பகுதியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை கணேஷ் நகரில் குடியிருந்து வருபவர் ஜெயபால் .

இவர் தனது குடும்பத்து டன் திருச்செந்தூரில் சாமி கும்பிடுவதற்காக காலையில் வீட்டை பூட்டி விட்டு சென்றுள்ளார்.

திருச்செந்தூர் சென்று விட்டு மீண்டும் மறுநாள் காலையில் வந்து பார்க்கும்போது வீட்டின் முன் பக்க கேட்டில் உள்ள பூட்டு உடைக்கப்பட்டு இருந்தது உள்ளே சென்று பார்த்தபோது வீட்டில் இருந்த மரகட்டிலில் உள்ள லாக்கரை உடைத்து அதிலிருந்து சுமார் 15 பவுன் தங்கநகை மற்றும் வெள்ளிப் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது.

அதிர்ச்சி அடைந்த ஜெயபால் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின் பேரில் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் விருதுநகரில் இருந்து தடயவியல் நிபுணர்கள் மற்றும் மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு கொள்ளையர்களை கண்டுபிடிக்கும் பணியில் போலீசார் இறங்கி உள்ளனர்.

மேலும் அப்பகுதியில் உள்ள சி.சி.டி.வி. கேமராகளையும் ஆய்வு செய்து வருகின்றனர் பூட்டிய வீட்டில் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

இந்தியாவில் அதிகபட்சமாக மாஞ்சோலை ஊத்து எஸ்டேட்டில் 2,876 மில்லிமீட்டர் மழை பதிவு

தனியார் வானிலை ஆய்வாளர் தகவல்

நெல்லை, ஜன.10– இந்தியாவிலேயே அதிகபட்சமாக மாஞ்சோலை ஊத்து எஸ்டேட்டில் 2876 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளதாக தனியார் வானிலை ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதன் அருகில் உள்ள இலங்கை கடல் பகுதியில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி வலுப்பெற்று புயல் சின்னமாக மாறியுள்ளது. இந்த புயல் தமிழக கடற்கரையை நெருங்கும் என்பதால் கடலோர மாவட்டங்களில் மீண்டும் பருவமழை தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது என தென்காசி மாவட்ட தனியார் வானிலை ஆய்வாளர் ராஜா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:

இன்று நள்ளிரவு மற்றும் நாளை அதிகாலை நேரங்களில் டெல்டா மற்றும் தென் கடலோர மாவட்டங்களில் மழை தொடங்கும். கடந்த 1871ம் ஆண்டு முதல் 2025ம் ஆண்டு வரையிலான 155 ஆண்டு கால தமிழக வரலாற்றில் 21வது புயல் சின்னம் இன்று உருவாகியுள்ளது. வரலாற்றில் மிக அரிய நிகழ்வாக இது கருதப்படுகிறது. 21ம் நூற்றாண்டை பொறுத்தவரை கடந்த 25 ஆண்டு கால வானிலை வரலாற்றில் இது 6வது புயல் சின்னமாகும். ஜனவரி மாதத்தை பொறுத்த வரை கடந்த 100 ஆண்டுகளில் 34 ஆண்டுகள் ஜனவரி மாதத்தில் மழை பதிவாகியுள்ளது. வானிலை அமைப்பை பொறுத்த வரை இந்தாண்டு லாநினோ மற்றும் எதிர்மறை இருமுனை நிகழ்வு ஆண்டாக இருந்தது. 2019ம் ஆண்டு முதல் 2024 வரை தொடர்ந்து 6 ஆண்டுகள் வடகிழக்கு பருவமழை இயல்பை விட அதிகம் மழை பதிவான நிலையில், தமிழகத்தில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை இயல்பை விட குறைவாக பதிவானது.

1940 முதல் 2025ம் ஆண்டு வரை உள்ள 86 ஆண்டுகளை கணக்கிடும் போது 44 ஆண்டுகள் லாநினோ ஆண்டுகளாக இருந்திருக்கிறது. லாநினோ இருந்த 44 ஆண்டுகளில் தமிழகம் 25 ஆண்டுகள் இயல்பான மழையும், 6 வருடங்கள் இயல்பை விட மிக அதிக மழையையும், 13 வருடங்கள் மழை பற்றாக்குறையும் தமிழகம் சந்தித்துள்ளது.

லாநினோ எதிர்மறை இருமுனை நிகழ்வு இதே போன்ற வானிலை அமைப்பு நிலவிய 1998, 2005, 2021 ஆகிய 3 ஆண்டுகளிலும் தமிழகம் இயல்பைவிட மிக மிக அதிகமழையை பெற்றிருக்கிறது. ஆனால் இந்தாண்டு மழை பற்றாக்குறையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்தாண்டு வடகிழக்கு பருவமழை காலத்தில் இந்தியாவிலேயே மிக அதிகமான மழையை நெல்லை மாவட்டம் ஊத்து 2,876 மில்லி மீட்டர் மழையை பெற்றுள்ளது. ஊத்துக்கு அடுத்தபடியாக நாலுமுக்கு, காக்காச்சி பகுதிகள் அதிக மழையை பெற்றிருக்கிறது. ஆனால் இதனை மழை பதிவான நிலையில், தமிழகத்தில் இந்தாண்டு வடகிழக்கு பருவமழை இயல்பை விட குறைவாக பதிவானது.

மதுவில் விஷம் கலந்து குடித்து வாலிபர் சாவு

நெல்லை, ஜன.10 ஆலங்குளம் அருகே அடிக்கடி தற்கொலை மிரட்டல் விடுத்து வந்த வாலிபர் மதுவில் விஷம் கலந்து குடித்து தற்கொலை செய்து கொண்டார். ஆலங்குளத்தை அடுத்த மருதம்பத்தூர் அருகே உள்ள கண்டபட்டி மெயின் ரோடு கீழத் தெருவை சேர்ந்தவர் தேவபிச்சையா. இவரது மகன் சந்திரகுமார் (20). கட்டிட தொழிலாளியான இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்துள்ளது. இதனை அவரது பெற்றோர் கண்டித்துள்ளனர். இதனிடையே அடிக்கடி விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்வதாக சந்திரகுமார் கூறிவந்துள்ளார். இந்த நிலையில் நேற்று முன்தினம் திடீரென மதுவில் விஷத்தை கலந்து குடித்து சந்திரகுமார் மயங்கி விழுந்தார். அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு சிகிச்சைக்காக பாளை அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி காலை சந்திரகுமார் பரிதாபமாக இறந்தார். இது குறித்து ஆலங்குளம் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மண்டபம் பேரூராட்சி பகுதிகளில்

உணவு பாதுகாப்பு துறையினர் ஆய்வு

கெட்டுப்போன உணவு பொருட்கள் அழிப்பு

ராமேசுவரம்,ஜன.10– ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதிகளில் உணவகங்கள், கடைகளில் உணவு பாதுகாப்பு துறை அலுவலர் முருகன் தலைமையில் நகராட்சி அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் உணவகங்களில் கெட்டுப்போன முந்தைய நாள் பயன்படுத்திய உணவுப் பொருட்களை அடுத்த நாள் சூடு பண்ணி விற்பனைக்கு வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டு அவை அனைத்தையும் பறிமுதல் செய்து அளிக்கப்பட்டது. அதேபோல் கடைகளில் தடை செய்யப்பட்ட பாலித்தீன் கவர்கள் மற்றும் பாலித்தின் பார்சல் பேப்பர்கள் கண்டறியப்பட்டு அனைத்தையும் பறிமுதல் செய்தனர்.

பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்கும் தரம்மற்ற உணவுகளை விற்பனை செய்வோர் மீது சட்டபூர்வமாக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்தனர்.

இந்த ஆய்வில் மண்டபம் பேரூராட்சி இளநிலை உதவியாளர் முனியசாமி, மண்டபம் சுகாதார ஆய்வாளர் சீனி மரக்காயர், பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் கோவிந்தராஜன், உள்ளிட்ட பேரூராட்சி பணியாளர்கள் பணியில் ஈடுபட்டனர்.

SURYODAY A BANK OF SMILES

சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்
பதிவு மற்றும் கார்ப்பரேட் அலுவலகம்: 1101, வார்ர்தா டெரஸஸ், ப்ளாட் 65, செக்டர் - 11, சிபிடி பேலாப்பூர்,நவி மும்பை - 400614. CIN: L65923MH2008PLC261472.

உடைமை அறிவிப்பு

மேற்கண்ட சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியான நான், நிதிச் சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002 (2002 ஆம் ஆண்டின் சட்டம் எண். 54) மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்கியவர்/கள் / உத்தரவாதம் அளித்தவர்/களுக்கு ஒரு கோரிக்கை அறிவிப்பை வழங்கினேன். மேற்கண்ட அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்கள் முடிந்த பிறகும், கடன் வாங்கியவர்/கள் / உத்தரவாதம் அளித்தவர்/கள் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், இந்த அறிவிப்பின் மூலம் கடன் வாங்கியவர்/கள் / உத்தரவாதம் அளித்தவர்/களுக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மேற்கண்ட சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 6 மற்றும் 8 உடன் படிக்கப்பட்ட விதிகளின் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் உடைமையை, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் நான் எடுத்துக்கொண்டேன்:

கடன் வாங்கியவர்/கூட்டுக் கடன் வாங்கியவர்/ உத்தரவாதம் அளித்தவரின் பெயர்	கோரிக்கை அறிவிப்பின் தேதி	07.07.2025
237000000901, 1) திரு. முத்துக்குமார் எம் த/பெ மாசிலாமணி 2) செல்வி. ரித்து வர்ஷினிஎம் த/பெ முத்துக்குமார்	மொத்த நிறுவைத் தொகை ரூ.	ரூ. 30,68,911.15/- 05.07.2025 நிலவரப்படி
	உடைமை தேதி	08.01.2026 (குறியீட்டு)

பிணையமாக வைக்கப்பட்ட சொத்து/அசையாச் சொத்தின் விளக்கம்: திருப்பூர் சாலை, தொட்டிபாளையம் சார் பதிவாளர் அலுவலகம், திருப்பூர் தாலுகா, தொட்டிபாளையம் கிராமம், கணக்கு எண். 183/2, புஞ்சை 2.70 ஏக்கர், வரி ரூ.3.07, கணக்கு எண். 188/IC, புஞ்சை 1.50 ஏக்கர், வரி ரூ.2.06, ஆக மொத்தம் 4.20 ஏக்கர் புஞ்சை நிலங்கள், "அவினாசி நகர் ஸ்ரீ குருவாயூரப்பன் நகர்" என்ற பெயரில் வீட்டு மனைகளாகப் பிரிக்கப்பட்டதில், 1030 சதுர அடி பரப்பளவுள்ள வீட்டு மனை எண். 31. எல்லைகள்: மேற்கில் வீட்டு மனை எண். 50, கிழக்கில் 30 அடி அகலமுள்ள தெற்கு-வடக்கு லேஅவுட் சாலை, வடக்கில் வீட்டு மனை எண். 30, தெற்கில் வீட்டு மனை எண். 32, மேற்கூறிய அளவுகளுக்குள். வடக்கு பக்கத்தில் கிழக்கு மேற்கு 50 அடி. தெற்கு பக்கத்தில் கிழக்கு மேற்கு 53 அடி. இருபுறமும் தெற்கு-வடக்கு 20 அடி, ஆக மொத்தம் 1030 சதுர அடி வீட்டு மனை, வழக்கமான பாதை வசதி, பொதுச் சாலை, பொது உரிமைகள் ஆகியவற்றுடன், தற்போது புதிய மறு அளவைப் புல எண். 188/1C2B, பட்டா எண். 990, சி-பிளாக்.

கடன் வாங்கியவர்கள்/ஜாமீன் அளித்தவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் இந்தச் சொத்துடன் எந்தவிதமான பரிவர்த்தனைகளையும் செய்ய வேண்டாம் என இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். சொத்து தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனையும், மேலே குறிப்பிடப்பட்ட கோரப்பட்ட தொகை மற்றும் அதன் மீதான கூடுதல் வட்டிக்கு, மெஸ்ஸர்ஸ் சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட் நிறுவனத்தின் சார்ந்ததாக உட்பட்டது.

அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி,
இடம்: தமிழ்நாடு, தேதி: 10.01.2026 **சூர்யோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்**

Protium | **புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்** (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவு செய்யப்பட்ட மற்றும் கார்ப்பரேட் அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் B2, ஃபேஸ் - 1 நிர்லோன் நாலெட்ஜ் பார்க், பஹாடி கிராமம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு அருகில், காமா இன்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கிழக்கு), மும்பை- 400063, மகாராஷ்டிரா.

உடைமை அறிவிப்பு - (பிரிவு 13(4) மற்றும் பாதுகாப்புப் பிணைய அமலாக்க விதிகள், 2002-இன் விதி 8(1) உடன் படிக்கப்பட்ட பின் இணைப்பு IV-இன் படி)

மேற்கண்ட, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்) (இனிமேல் "புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்" என குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக, நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002 (2002 ஆம் ஆண்டின் சட்டம் எண் 54) ("SARFAESI சட்டம்") இன் விதிகளின் கீழும், பாதுகாப்புப் பிணைய (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(2)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, 10 ஜனவரி 2025 தேதியிட்ட ஒரு கோரிக்கை அறிவிப்பை வழங்கினேன் அதில், GS0465EL1120571 என்ற கடன் கணக்கு தொடர்பான, கடன் வாங்கியவர்களான ஸ்ரீ வாரி மினரல்ஸ் அதன் உரிமையாளர் மடையன் த/பெ பெரியசாமி மூலமாகவும், மற்றும் இணை-கடன் வாங்கியவர்களான: 1. மதையன் த/பெ பெரியசாமி, 2. சுமதி க/பெ மதையன் ஆகியோரை, 6 ஜனவரி 2025 நிலவரப்படி INR. 47,42,014.15/- (நாற்பத்தி ஏழு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து பதினான்கு ரூபாய் மற்றும் பதினைந்து பைசா மட்டும்) என அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்ட தொகையை, அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கோரப்பட்டது.

கடன் வாங்கியவர்கள் மேற்கூறிய தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடன் வாங்கியவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தின் மீது, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின்படியும், **பாதுகாப்புப் பிணையம் (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 8-இன் படியும், இந்த 08வது ஜனவரி 2026 அன்று, கிழக்கையப்பம்பிட்டிவர் குறியீட்டு ரீதியான உடைமையை எடுத்து** க்கொண்டுள்ளார்.

குறிப்பாகக் கடன் வாங்கியவர்களும், பொதுவாகப் பொதுமக்களும் மேற்கூறிய **சொத்துடன் எந்தவிதமான பரிவர்த்தனைகளிலும் ஈடுபட வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள்.** சொத்து தொடர்பான எந்தவொரு பரிவர்த்தனையும், **வேது ஜனவரி 2025 நிலவரப்படி,** புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்குச் செலுத்த வேண்டிய **INR 47,42,014.15/- (நாற்பத்தேழு லட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து பதினான்கு ரூபாய் மற்றும் பதினைந்து பைசா மட்டும்)** தொகைக்கான பிணையத்திற்கும், அதன் மீதான மேலதிக வட்டி மற்றும் ஏற்படப் அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் இதரச் செலவுகளுக்கும் உட்பட்டது.

பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்வதற்கு உள்ள கால அவகாசம் குறித்து, **சட்டத்தின் பிரிவு 13-இன் துணைப்பிரிவு (8)-இல்** உள்ள விதிகள் கடன் வாங்கியவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகிறது.

அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விளக்கம்- சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், ஜலகண்டபுரம் சார் பதிவாளர் அலுவலகம், எடப்பாடி தாலுகா, பக்கநாடு கிராமம், கதவு எண் 8/73-A, மதிப்பீட்டு எண் 118573-இல் அமைந்துள்ள நிலம் மற்றும் கட்டிடம் அடங்கிய சொத்தின் முழுப் பகுதி. சீஸ்ஸ்.எண். 128/3 புஞ்சை ஹெக்டேர் 0.59.0 கிஸ்தி 3.20, 1.46 ஏக்கர் பரப்பளவில், இதில் 5014 சதுர அடி நிலம் மற்றும் இதரச் சலுகை உரிமைகள் **பின்வரும் எல்லைகள் மற்றும் அளவுகளுக்குள் அமைந்துள்ளது:- வடக்கு:** வாங்குபவர் (மதையன்) மற்ற சொத்து **கிழக்கு:** வாங்குபவர் (மடையன்) மற்ற சொத்து **தெற்கு:** பஞ்சாயத்து சாலை **மேற்கு:** வாங்குபவர் (மதையன்) மற்ற சொத்து மொத்தம் 5014 சதுர அடி நிலம், அனைத்து வழமையான பாதைகள் மற்றும் சலுகை உரிமைகளுடன் பக்கநாடு பஞ்சாயத்தின் எல்லைக்குள் அமைந்துள்ளது.

தேதி: 08வது ஜனவரி 2026 **எஸ்டி/-, புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் சார்பாக,**
இடம்: சேலம், தமிழ்நாடு **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**

Protium | **புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்** (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் என அறியப்பட்டது)

பதிவு செய்யப்பட்ட மற்றும் கார்ப்பரேட் அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் பி2, ஃபேஸ் - 1 நிர்லோன் நாலெட்ஜ் பார்க், பஹாடி கிராமம், வெஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு அருகில், காமா இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோரேகான் (கிழக்கு), மும்பை- 400063, மகாராஷ்டிரா.

பொது அறிவிப்பு (பாதுகாப்பு நலன் (அமலாக்க) விதிகள், 2002-இன் விதி 3 (1)-இன் கீழ்) நிதிச் சொத்துக்களைப் பத்திரமயமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002-இன் பிரிவு 13 (2)-இன் கீழ் அறிவிப்பின் மாற்றுவழிச் சேவை.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெற்றவர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், அவர்கள் புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் மற்றும் அதற்கு முன்பு குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட் என அறியப்பட்டது) நிறுவனத்திடமிருந்து பெற்ற கடன் வசதியைத் திருப்பிச் செலுத்துவதில் தவறியதால், ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, அவர்களின் கடன் வசதி வங்கி சாரா நிதி நிறுவனத்தின் கணக்குகளில் செயல்படாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிறகு, வங்கி சாரா நிதி நிறுவனம், நிதிச் சொத்துக்களைப் பத்திரமயமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு நலனை அமல்படுத்துதல் சட்டம், 2002 (SARFAESI சட்டம்)-இன் பிரிவு 13(2)-இன் கீழ், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அந்தந்தக் கடன் பெற்றவர்களின் கடைசியாக அறியப்பட்ட முகவரிகளுக்கு கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பியுள்ளது. அதன்மூலம், கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின்படி, அந்தந்த அறிவிப்புகளின் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள், அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளையும், அத்துடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு ஒப்பந்த விகிதத்தில் கூடுதல் வட்டியையும், மற்றும் அந்த கோரிக்கை அறிவிப்புகளில் கூறப்பட்டுள்ளபடி தற்செயலான செலவுகள், கட்டணங்கள் போன்றவற்றையும் செலுத்துமாறு அவர்களிடம் கோரப்படுகிறது மற்றும் வற்புறுத்தப்படுகிறது. இருப்பினும், பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002 (SARFAESI விதிகள்) விதி 3-இன் படி, இந்த வெளியீட்டின் மூலமாகவும் எங்களால் சேவை செய்யப்படுகிறது.

வ. எண்.	கடன் கணக்கு எண்/கடன் வாங்கியவர் மற்றும் இணை கடன் வாங்கியவர்களின் பெயர் மற்றும் முகவரி	NPA தேதி	கோரிக்கை அறிவிப்பு தேதி
		கீழே குறிப்பிடப்பட்ட தேதியின்படி செலுத்த வேண்டிய மொத்த நிறுவைத் தொகை (INR)	
1.	**1.கடன் கணக்கு எண் GS004MF02478504** **1. ரோ ஃபுட்ஸ், அதன் உரிமையாளர் யோகேஸ்வரன் ரா, த/பெ ராம்குமார் (கடன் வாங்கியவர்), 2. பாலகிருஷ்ண தங்கபூரணி, ம/பெ ராம்குமார் (இணை கடன் வாங்கியவர்),3. எஸ் மோனிகா, ம/பெ யோகேஸ்வரன் ரா (இணை கடன் வாங்கியவர்), 4. யோகேஸ்வரன் ரா, த/பெ ராம்குமார் (இணை கடன் வாங்கியவர்)**	31.12.2025	6 ஜனவரி 2026
		INR 2,60,52,214.49/- (இரண்டு கோடி அறுபது லட்சத்து ஐம்பத்திரண்டாயிரத்து இருநூற்றுப் பதினான்கு ரூபாய் மற்றும் நாற்பத்தொன்பது பைசா மட்டும்) 6 ஜனவரி 2026 தேதியின்படி	
	முகவரி: (கடன் வாங்கியவர் ரோ ஃபுட்ஸ்; இணை கடன் வாங்கியவர் - பாலகிருஷ்ண தங்கபூரணி) எண். 13, குப்பமணி கிராமம், ரோட்தூர்லம், திருவள்ளூர், தமிழ்நாடு 600052, **முகவரி: (இணை கடன் வாங்கியவர் பாலகிருஷ்ண தங்கபூரணி; இணை கடன் வாங்கியவர் - எஸ் மோனிகா; இணை கடன் வாங்கியவர் - யோகேஸ்வரன் ரா)** எண். 3/300, 25வது தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர், மதுரவாயல், திருவள்ளூர், தமிழ்நாடு 600095		
2.	**கடன் கணக்கு எண். GS009MF02464791** **1. சன் கிரியேஷன், அதன் கூட்டாளிகள் மூலம் வனிதா ஜே, குமாரசாமி மற்றும் மகேஸ்வரி, கே நாயக்கர் சிவகுமார் (கடன் வாங்கியவர்), 2. ஜே.கே. எண்டர்பிரைசஸ் எண்டர்பிரைசஸ், கூட்டாளிகள் மூலம் மகேஸ்வரி, W/o கே நாயக்கர் சிவகுமார் மற்றும் K நாயக்கர் சிவகுமார் (இணை கடன் வாங்குபவர்), 3. கே நாயக்கர் சிவகுமார், S/o கந்தசாமி (இணை கடன் வாங்குபவர்)4. வனிதா டி, W/o கிருமூர்த்தி முத்துசாமி (இணை கடன் வாங்குபவர்), 5. மகேஸ்வரி, W/o நாயக்கர் சிவகுமார் (இணை கடன் வாங்குபவர்)**	03.08.2025	ஜனவரி 6, 2026
		INR 1,23,18,747.53/- (ரூபாய் ஒரு கோடியே இருபத்து மூன்று மூன்று லட்சத்து பதினெட்டாயிரத்து எழுநூற்று நாற்பத்தேழு ஐம்பத்து மூன்று பைசா மட்டும்) ஜனவரி 6, 2026 நிலவரப்படி	
	முகவரி: (கடன் வாங்கியவர் சன் கிரியேஷன்; இணை கடன் வாங்குபவர் ஜே.கே. எண்டர்பிரைசஸ் எண்டர்பிரைசஸ்) S 9 0 / 1 A, கணேஷ் நகர், பிச்சம்பாளையம் புதூர், தொட்டிபாளையம் கிராமம், திருப்பூர், தமிழ்நாடு 641603.**முகவரி: (கடன் வாங்கியவர் சன் கிரியேஷன்; இணை கடன் வாங்குபவர் - வனிதா டி)** SF எண். 468/1A, D எண். 44N, அரணை லியப்பாளையம் நகர், PAP கால்வாய் சாலை, நல்லூர், திருப்பூர், தமிழ்நாடு 641606.**முகவரி: (இணை-கடன்தாரர் ஜே.கே. எண்டர்பிரைசஸ் எண்டர்பிரைசஸ்)** - 183 NA, கேத்தாம்பாளையம், பிச்சம்பாளையம் புதூர், தொட்டிபாளையம் கிராமம், திருப்பூர், பல்லடம், தமிழ்நாடு 641668,**முகவரி: (இணை கடன் வாங்கியவர் கே நாயக்கர் சிவகுமார்; இணை கடன் வாங்கியவர் மகேஸ்வரி)** எண். 142, 14வது தளம், பாலாஜ